DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–115/2021

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.நீலோபர்நிசா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1 , A3 present. A2 , A4, A5 dispensed with by Hon'ble High Court)
24.06.2025– 02.50 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் வாலிநோக்கத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள்.

2. எங்களுக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 30.06.2021ந் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நான் குடி தண்ணீர் எடுப்பதற்காக கடற்கரைக்கு சென்றுவிட்டேன். வீட்டில் எனது கணவர் சகுபர்சாதிக் மற்றும் எனது ஐந்து வயது மகனும் இருந்தார்கள். எனது கணவரும், மகனும் மெமரிக்கார்ட்டை பயன்படுத்தி வீட்டின் முன்பாக பாட்டு கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

3. நான் தண்ணீர் எடுத்துக்கொண்டு அரை மணி நேரம் கழித்து வீட்டிற்கு வந்தேன். அதற்கு முன்பாக எனது கணவரை பாசித், அலாவுதீன், சலாவுதீன் ஆகியோர் கம்பால் எங்கள் வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு வீட்டிற்குள் வந்து எனது கணவரை அடித்துள்ளார்கள். அலாவுதீன் காலால் எனது கணவரை மிதித்தார். சலாவுதீன் என்பவர் எனது கணவரை வளையர் பயலே என்று ஆபாசமாக

பேசி காலால் மிதித்தார்.

4. எங்கள் வீட்டில் இருந்த கம்பை எடுத்து எதிரிகள் மூவரும் எனது கணவரை அடித்தார்கள். பின்னர் நான் தடுத்தபோது என்னை கீழே தள்ளிவிட்டார்கள். அலாவுதீனின் மனைவி சபீயாபீவி மற்றும் சுலையாபீவி ஆகிய இருவரும் என்னை கையால் அடித்தார்கள். எனது கணவருக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. எனக்கு தலையில் வலி ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்த எங்கள் தெருவை சேர்ந்த அலிகான்சாயீபு, லூர்முகமது ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். பின்னர் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். பின்பு காயம்பட்ட நானும், எனது கணவரும் முதலில் வாலிநோக்கம் அரசு மருத்துவமனையில் ஊசி போட்டுக்கொண்டு மறுநாள் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றோம்.

5. பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்ததால் சிகிச்சை முடித்து 05.07.2021ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

6. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்துதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** நானும், எனது கணவரும் சுமார் ஒரு வார காலம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றோம்.

7. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –**</u>

1. நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தைத்தான் புகார் மனுவிலும் , போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 30.06.2021ம் தேதி நடந்த சம்பவத்திற்கு அன்றைய தினமே ஒரு புகாரும், 05.07.2021ம் தேதி ஒரு புகார் மனுவும், 24.07.2021ம் தேதி பின்னிட்டு

ஒரு புகார் மனுவும் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் முதலில் கொடுத்த புகாரில் ஒன்பது நபர்களை எதிரிகளாக சேர்த்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

2. 01.07.2021 ம் தேதி இரவு 10.00 மணிக்கு கீழக்கரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம் என்றால் சரிதான். நான் கீழக்கரை மருத்துவமனை செல்லும் போது எனக்கும் எனது கணவருக்கும் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கீழக்கரை அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவரிடம் காயம் குறித்து எதேனும் கூறினேனா என்றால் கூறினேன். மாலை 06.30 மணிக்கு சம்பவம் நடந்தாக கூறினேன். 5 நபர்கள் தாக்கியதாக கூறினேன். எந்த ஆயுதத்தால் தாக்கியதாக கூறினேன் என்றால் கம்பால் தாக்கியதாக கூறினேன்.

3. நான் கொடுத்த மூன்று புகார்களையும் யார் எழுதினார்கள் என்றால் எனது அக்காதான் எழுதினார். 01.07.2021ம் தேதி 4வது எதிரி சபியாபேகம் என் மீது ஒரு புகார் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜமாத் மூலம் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறோம் என்று புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 24.07.2021ம் தேதி கொடுத்த புகாரில் ஊர் முக்கியஸ்தர்கள் மூலம் சமாதானமாக சென்றுவிடுகிறோம் என்று கூறியுள்ளோமா என்றால் இல்லை. 30.06.2021ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 24.07.2021ம் தேதி காலதாமதமாக புகார் கொடுத்தற்கான காரணம் என்னவென்றால் திரும்ப திரும்ப எதிரிகள் பிரச்சனை செய்ததால் புகார் கொடுத்தேன்.

4. எனது கணவரை அடித்த போது நான் தண்ணீர் எடுக்க சென்றுவிட்டேன். பின்பு நான் வந்தபோது தான் என்னை அடித்தார்கள் என்றால் நான் தடுக்க சென்றேன் என்னை அடித்தார்கள். சம்பவம் நடந்தது எனது வீட்டிற்குள்தான் என்றால் சரிதான். அலாவுதீன் என்னை காலால் மிதித்ததை போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்பகை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

5. சம்பவம் நடந்த போது நான், எனது கணவர், எனது மகனை தவிர சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். என்னை போலிசார் தனிப்பட்ட முறையில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். எப்போது விசாரித்தார்கள் என்றால் சுமார் ஒருவாரம் அல்லது 10 நாட்கள் இருக்கலாம். எனக்கு வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்பதால் கீழக்கரை அரசு மருத்துவமனையில் இருந்து வெளிநோயாளியாக சிகிச்சை செய்து அன்றே அனுப்பி வைத்தார்கள் என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஸ்கேன் எடுக்கு அனுப்பிவைத்தார்கள். நான் அன்றைய தினமே இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். என்னை போலிசார் சம்பவம் நடந்து ஒரு வார காலத்திற்கு விசாரணை செய்யவில்லை என்றால் போலிசார் போன் மூலம் எங்களை விசாரணைக்காக வர சொன்னார்கள்.

6. நான்தான் எதிரிகளுடன் சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரி என்மீது புகார் கொடுத்த பின்புதான் நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல்சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி